Reg. No. 1 2 2 3 3

# மேல்நிலை இரண்டாமாண்டு காலாண்டு பொதுத் தேர்வு - 2017

நேரம் : 3.00 மணி) பகுதி-I தமிழ் முதல் தாள் (மொத்த மதிப்பெண்கள் : 100

(செய்யுளும் இலக்கணமும்)

## Language - Part I - Tamil - Paper I

அறிவுரை : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டும் எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : 1. விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

2. வினா எண் VI-க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகளில் விடை எழுதுக : 4×2=8

1. எட்டுத்தொகை நூல்கள் யாவை ?
2. எளியவும் அரியவும் ஆவன யாவை ?
3. சிலப்பதிகாரம் - பெயர்க்காரணம் தருக.
4. இராமன் குறிப்பால் உணர்ந்தவை யாவை ?
5. தேம்பாவணி - பொருள் கூறுக.
6. தமிழக அரசு பாரதிதாசனைப் போற்றியுள்ளமை யாங்ஙனம் ?

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக : 3×4=12

7. வரதநஞ்சையப் பிள்ளை எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவம் என்று கூறுகின்றார் ?
8. வினைமேற் சென்ற தலைவனிடம் தூதுவந்த பாணன் தெரிவித்த செய்தி யாது?
9. இடஞ்சுட்டி விளக்குக : "குருகுமுண்டு தான் மணந்த ஞான்றே"
10. பராய்க்கடன் உரைத்தல் - விளக்குக.
11. பொறையுடைமையின் சிறப்பினைத் திருவள்ளுவர் வழிநின்று விளக்குக.

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக : 3×4=12

12. கண்ணகியைக் கண்ட ஊரவர் திகைத்துக் கூறியன யாவை ?
13. என் பெருந்தெய்வம் என்று அனுமன் உரைத்தன யாவை ?
14. இளந்தாவீதன் எடுத்துச் சென்ற ஆயுதம் யாது ?
15. தாவீதன் கோலியாத்தினை வென்றமை யாங்ஙனம் ?
16. பாண்டியன் பரிசாகிய பேழைக்குள் இருந்தன யாவை ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு இருபது வரிகளில் விடை எழுதுக: 1×8=8

17. அறிவுடைமை என்னும் அதிகாரத்தில் தெரிவிக்கப்பெற்றுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
18. சீதையை அனுமன் கண்டுவந்து கூறிய செய்திகளை இருபது வரிகளில் மிகாது எழுதுக.
19. "மறப்பரிது நும்நன்றி" - என்று கூறிய அன்னத்திடம் வேலன் கூறிய எழுச்சியுரைகளை இருபது வரிகளின் மிகாது எழுதுக.

V. பின்வரும் செய்யுளடியின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக: 4×1=4

20. "நெடுந்தேர் ஊர்மதி வலவ"
 அ) இஃது யார் கூறியது ?
 ஆ) இஃது யாரிடம் கூறியது ?
 இ) இவ்வடி இடம்பெற்றுள்ள பாடலின் ஆசிரியர் யார் ?
 ஈ) எந்நூலில் இடம் பெற்றுள்ளது ? (அல்லது)
21. "கடமை புரிந்தான் இவனே"
 அ) கடமை புரிந்தவன் யாவன் ?
 ஆ) இது யார் கூற்று ?
 இ) இது யாரிடம் கூறிய கூற்று ?
 ஈ) இத்தொடர் இடம்பெற்றுள்ள நூல் எது ?

VI 22. "கண்டனென்"... எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதி பாவகையினைச் சுட்டுக. 4+2=6

23. 'நன்றி' எனத் தொடங்கும் குறளையும், 'நோய்' என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக. 2+2=4

VII 24. எவையேனும் இரண்டு சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக : 2×2=4
 அ) திறந்த ஆ) கொள்வர் இ) காண்பன் ஈ) எய்தினன் உ) அறைதல் ஊ) முழங்கிய

திருப்புக

25. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு இலக்கணக் குறிப்பு தருக: 3×2=6
அ) தினந்தினம் ஆ) நெடுந்தேர் இ) தழீஇ ஈ) மாஞாலம்
உ) தாமரைக் கண்கள் ஊ) கைவயம்

26. எவையேனும் இரண்டனுக்குப் புணர்ச்சி விதி தருக : 2×2=4
அ) முதுமரம் ஆ) நிறையுடைமை இ) பூங்கொடியாள் ஈ) மணிக்கழுத்து
உ) வெஞ்சுடர் ஊ) உயிருண்டு

27. சான்று தந்து விளக்குக : 1×4=4
பொருண்மொழிக் காஞ்சித் துறை (அல்லது) குறிஞ்சித் திணை

28. "இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை" 1×4=4
– இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக (அல்லது)
தற்குறிப்பேற்ற அணி (அல்லது) உவமையணியை விளக்குக.

VIII பொருத்துக : 4×1=4

| | புலவர்கள் | | இயற்றிய நூல்கள் |
|---|---|---|---|
| 29. | இளங்கோவடிகள் | - | மணிமேகலை |
| 30. | திருத்தக்க தேவர் | - | சிலப்பதிகாரம் |
| 31. | நாதகுத்தனார் | - | சீவக சிந்தாமணி |
| 32. | சீத்தலைச் சாத்தனார் | - | வளையாபதி |
| | | - | குண்டலகேசி |

IX உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16×1=16

33. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன்
அ) சிவன் ஆ) திருமால் இ) முருகன்

34. புறநானூற்றின் திணைகள்
அ) ஐந்து ஆ) பதினொன்று இ) பத்து

35. அகநானூற்றுக்கு வழங்கும் வேறு பெயர்
அ) புறம் ஆ) நெடுந்தொகை இ) புறப்பாட்டு

36. எட்டுத் தொகை நூல்களில் முதலாவதாக அமைந்த நூல்
அ) குறுந்தொகை ஆ) புறநானூறு இ) நற்றிணை

37. குறுந்தொகைக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர்
அ) பெருந்தேவனார் ஆ) வரந்தருவார் இ) கபிலர்

38. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள்
அ) 4 ஆ) 9 இ) 10

39. தமிழர் திருமறை என்றழைக்கப்படும் நூல்
அ) திருக்குறள் ஆ) சிலப்பதிகாரம் இ) ஆத்திச்சூடி

40. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு
அ) படலம் ஆ) இயல் இ) காதை

41. தமிழின் முதல் காப்பிய நூல்
அ) மணிமேகலை ஆ) குண்டலகேசி இ) சிலப்பதிகாரம்

42. உத்தரகாண்டத்தைப் பாடியவர்
அ) ஒட்டக்கூத்தர் ஆ) வான்மீகி இ) புகழேந்திப் புலவர்

43. கம்பராமாயணத்தின் உட்பிரிவு
அ) இயல் ஆ) படலம் இ) காதை

44. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி
அ) சதுரகராதி ஆ) பேரகராதி இ) அரும்பத அகராதி

45. திருக்காவலூர்க் கலம்பகம் என்ற நூலின் ஆசிரியர்
அ) இளங்கோவடிகள் ஆ) பாரதிதாசன் இ) வீரமாமுனிவர்

46. சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்ற பாரதிதாசன் நூல்
அ) பிசிராந்தையார் நாடகம் ஆ) இருண்ட வீடு இ) பாண்டியன் பரிசு

47. பாரதிதாசன் வெளியிட்ட இதழ்
அ) இந்தியா ஆ) குயில் இ) சுதேசமித்திரன்

48. அடிவாழ்த்துவம் என்பது
அ) பண்புத்தொகை ஆ) அடுக்குத் தொடர் இ) இரண்டாம் வேற்றுமைத் தொகை

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2×2=4

49. அஞ்சுவ தஞ்சாமை ----- அஞ்சுவ
தஞ்சல் அறிவார் -------.

50. சொல்லுதல் யார்க்கும் எளிய ------
சொல்லிய ----- செயல்.